# அழகான சட்டை



Room to Read®

கதை எழுதியவர்: அருட்செல்வி மாமி
படம் வரைந்தவர்: ரங்க மாமா




விடுமுறை நாள், கடையில் எவரும் இருக்கவில்லை.




"இந்தப் பொம்மைகள் மிகவும் அழகாக இருக்கின்றனவே!"



"நாங்களும் ஆடைகள் அணிந்தால் அழகாக இருப்போம்."



“நாங்கள் இப்படிச் செய்தால் என்ன?
வேறு இடத்தில் ஆடைகளைத்
தேடிப்பார்ப்போம்.”



“சரியான இடத்திற்கு வந்து விட்டோம்.
ஆ! இவ்வளவு ஆடைகளா!”



"இது எங்களுக்கு அளவானதாக இல்லையே!"



“என்னால் நடக்க முடியவில்லையே.”



“நாங்கள் வேறு பகுதிக்குச் செல்வோம்.”



“இது எங்களுக்கு அழகாக இல்லை.”




“இவை போர்வைத் துணிகள். எங்களுக்கு ஆடைகள்தான் வேண்டும்.”



எல்லோரும் மேலுள்ள பகுதிக்குச் சென்றார்கள்.



மாடிப்படிகளிலிருந்து தவறி விழுந்து விட்டார்கள்.



"ஆஹா! இங்குதான் எமக்கு அளவான ஆடைகள் உள்ளன."



ஆடைகளை அணிந்து, ஒருவரை ஒருவர் பார்த்து மகிழ்ந்தனர்.



“அம்மா! எனக்கு இந்தப் பொம்மைகள்தான் வேண்டும்.”